முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 628/2023

வா.சா.2 / குமார் /16.10.2025

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :

03.08.2022ம் தேதியன்று நான் ஒரு இலட்சம் பணம் கொடுத்ததாக சொல்லும் விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்திலோ கிரய ஒப்பந்தத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திற்கான முத்திரைத்தாள் 27.06.2022ம் தேதியன்று வாங்கப்படவில்லை என்றும் 31.08.2022ம் தேதியில் தான் வாங்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. முத்திரைத்தாள் வாங்கும் போது ஆதார் அடையாள அட்டை காண்பித்து தான் வாங்க வேண்டும் என்றால் சரிதான். யாருடைய ஆதார் அட்டை கொடுத்து மேற்படி முத்திரைத்தாள் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முத்திரைத்தாள் விற்பனையாளரை விசாரித்தால் யார் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். முத்திரைத்தாள் வாங்கிய இடத்தில் தான் வா.சா.ஆ.1 தயார் செய்தோம் என்றால் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதி ஸ்ரீராம் பைனான்சில் வாங்கிய ரூபாய் 42 இலட்சம் மட்டும் தான் நான் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு பாக்கி கிரய தொகை ரூபாய் ஒரு இலட்சம் இந்நீதிமன்றத்தில் வைப்பீடும் செய்துள்ளேன். நான் ஸ்ரீராம் பைனான்சில் செலுத்திய ரூபாய் 42 இலட்சத்திற்கு வட்டி வராததால் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகனான கார்த்திக்கால் எனக்கு ரூபாய் 42 இலட்சம் செலுத்த முடியாததால் பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக இட்டு கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் கிரயம்

வாங்குவதாக இருந்து கிரய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் என் மனைவிக்கு முழுவிவரமும் தெரிந்திருக்கும் என்று சொன்னால் அவருக்கு சற்று படிப்பறிவில்லாததால் சரியாக சாட்சியம் அளிக்க முடியவில்லை. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.10.16 20:38:10 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 628/2023

வா.சா.3 / மல்லிகா அர்ஜூன் /16.10.2025

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வாதி எனக்கு அத்தை உறவு வேண்டும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கு பற்றிய முழுவிவரம் தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். பிரதிவாதி கனகராஜை தாவா கிரய ஒப்பந்தத்திற்கு முன்பாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை முழுவதுமாக படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ல் நான் எத்தனையாவது சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.1ல் கிரய ஒப்பந்தத்தில் யார் முதலில் கையொப்பம் செய்தார் என்றால் கனகராஜ் கையொப்பம் செய்தார். இரண்டாவதாக ஹேமலதா கையொப்பம் செய்தார். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படும்போது யார் யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் கனகராஜ், ஹேமலதா, குமார் மற்றும் நான் உடனிருந்தோம். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தின் முத்திரைத்தாளை யார் வாங்கி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கனகராஜ் சார்பாக வா.சா.ஆ.1ல் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படும் போது எவ்வளவு தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்று கேட்டால் ரூபாய் 2 இலட்சம் ஹேமலதா கனகராஜ்க்கு கொடுத்தார். வா.சா.ஆ1ல் சாட்சி கையொப்பம் எங்கு வைத்து இடப்பட்டது என்றால் கனகராஜ் வீட்டில் வைத்து இடப்பட்டது. அவ்வாறு எத்தனை மணிக்கு கையொப்பம் இடப்பட்டது என்று கேட்டால் நண்பகல் சுமார் 12.00 மணிஇருக்கும். பிரதிவாதியின் மகன் கார்த்திக் பழக்கமானவரா என்றால் பழக்கம் கிடையாது ஆனால் தெரியும். எனக்கு என்ன தொழில் என்று கேட்டால் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். ரூபாய் 2 இலட்சம் கிரய முன்பணம் கொடுத்ததற்கு பின் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று கேட்டால் கார்த்திக் அக்கவுண்டிற்கு ஒரு இலட்சம் பண பரிமாற்றம் செய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன். கிரய ஒப்பந்தத்திற்கு முன்பாக அசல் பத்திரங்கள் சரிபார்க்கப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கனகராஜ் வீட்டில் எங்கு வைத்து அவ்வாறு சாட்சி கையொப்பம் செய்தேன் என்று கேட்டால் அவரது வீட்டு போர்ட்டிக்கோவில் வைத்து கையொப்பம் செய்தேன். அவரது வீட்டிற்குள் செல்லவில்லை. அந்த வீட்டில் யார் வசிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. என் வீடு தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தொலைவு என்றால் அரை கிமீ தொலைவு இருக்கும். எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துள்ளேன். வாதி பாக்கி கிரய தொகையான ரூபாய் 6 இலட்சத்தை செலுத்தி பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தை கிரயம் பெற்று கொள்ள தயாராக இருந்தார் என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி தாவா சொத்தை மூன்றாம் நபருக்கு விற்க முயற்சி செய்கிறார் என்று சொல்லியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் அசல் பத்திரம் ஸ்ரீராம்பைனான்ஸ் வசம் இருந்தது தெரியுமா என்றால் தெரியும். வாதி ஸ்ரீராம்பைனான்சுக்கு எவ்வளவு ரூபாய் செலுத்தினார் என்று கேட்டால் ரூபாய் 42 இலட்சம் காசோலை மூலமாக கொடுத்தது தெரியும். கிரய ஒப்பந்த பத்திரம் எங்கு வைத்து யாரால் தயாரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள முத்திரை தாள் எனது ஆதார் அட்டை கொண்டு வாங்கப்பட்டது என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் கிரய ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றும் நான் கார்த்தியை அழைத்து கொண்டு கனகராஜிடம் கையொப்பம் மட்டும் வாங்கி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் பிரதிவாதியின் மகன் கார்த்திக்கும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் நன்றாக பழக்கம் என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ரொக்கமாக ரூபாய் இரண்டு இலட்சமும், ஸ்ரீராம்பைனான்சில் செலுத்திய ரூபாய் 42 இலட்சம் போக பாக்கி கிரய தொகை எவ்வளவு என்று கேட்டால் ரூபாய் 6 இலட்சம் ஆகும். அதன்பிறகு பத்திர பதிவு அலுவலகத்திற்கு போனேனா என்றால் கனகராஜ் வரவேயில்லை அதனால் போகவில்லை. வாதி அவ்வாறு பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றாரா என்பது எனக்கு தெரியாது. ஆனால் நான் அதன்பிறகு போகவில்லை. ஸ்ரீராம்பைனான்சில் ரூபாய் 42 இலட்சம் செலுத்தும் போது நானும் போயிருந்தேன். அங்கு யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்று கேட்டால் கனகராஜ், ஹேமலதா, கார்த்திக் மற்றும் குமார் ஆகியோர் இருந்தார்கள். ரூபாய் 42 இலட்சம் ஸ்ரீராம்பைனான்சில் செலுத்தியதற்கு இரசீது கொடுக்கப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சி அளித்துள்ளேனா என்றால் இல்லை. ஹேமலதா தாவா சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்குவதாக இருந்தார் என்று கேட்டால் ரூபாய்

51 இலட்சத்திற்கு கிரயம் வாங்கவிருந்தார். நான் ஸ்ரீராம்பைனான்சில் பணம் செலுத்த மட்டுமே உடன் சென்றிருந்தேன் என்றும் வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கனகராஜ் கிரயம் எழுதி கொடுக்க எங்கள் அனைவரையும் பத்திர பதிவு அலுவலகத்திற்கு அழைத்தாரா என்றால் அவர் என்னிடம் எதுவும் பேசவில்லை. வழக்கின் விவரம் எனக்கு முழுமையாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பாக்கி கிரய தொகையான ரூபாய் 6 இலட்சம் எப்படி செலுத்தப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சியம் ஏற்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.10.16 20:38:17 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.